## November 21, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக அமெரிக்காவும் ரஷியாவும் உருவாக்கியுள்ள 28 அம்ச போர் நிறுத்த திட்டம் குறித்து ஆலோசனை நடத்துவதற்காக அமெரிக்க ராணுவத் துறை அமைச்சர் டான் டிரிஸ்கால் தலைமையிலான மூத்த ராணுவ அதிகாரிகள் குழு உக்ரைன் தலைநகர் கீவ் வந்தடைந்தது.
   i. அந்தக் குழுவினர் உக்ரைன் பிரதமர் யூலியா ஸ்விரிடென்கோவையும், உக்ரைன் பாதுகாப்புத் துறை அமைச்சர் டெனிஸ் ஷ்மைஹாலையும் சந்தித்து பேசினர். அதைத் தொடர்ந்து, அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கியையும் சந்தித்து அவர்கள் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
   ii. அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் இரண்டாவது முறை ஆட்சிப் பொறுப் பேற்ற பிறகு உக்ரைனுக்கு வந்துள்ள அமெரிக்காவின் மிக உயரிய ராணுவக் குழு இது என்று கூறப்படுகிறது.
   iii. முன்னதாக, டிரம்ப்பின் சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்காஃப் மற்றும் ரஷிய சிறப்புத் தூதர் கிரில்டிமித்ரியேவ் இணைந்து, உக்ரைன் போர் நிறுத்தம் தொடர்பான 28 அம்சத் திட்டத்தை தயாரித்ததாக செய்திகள் வெளியாகின.
   iv. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாக, உக்ரைன் இன்னும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் டான்பாஸ் பகுதிகளை ரஷியாவுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும், உக்ரைன் தனது ராணுவத்தின் அளவை பெருமளவு குறைக்க வேண்டும், பலவகை ஆயுதங்களை அந்த நாடு கைவிட வேண்டும், நேட்டோவில் இணையாத நடுநிலை நாடாக உக்ரைன் தன்னை அறிவித்துக்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்டவை இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.
2. ஈரான் தன்னிடம் உள்ள உயர் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தின் கையிருப்பு குறித்த முழு தகவல்களை வழங்க வேண்டும் என்று ஐநா. அணுசக்தி கண்காணிப்பு அமைப்பான ஐஏஇஏ வலியுறுத்தியுள்ளது. இது குறித்து, 35 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐஏஇஏ வாரியம் வியன்னாவிலுள்ள ஐஏஇஏ தலைமையகத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளதாவது :
   i. அணுசக்தி திட்டங்களை ஆய்வு செய்ய ஐஏஇஏ-வுக்கு ஈரான் முழுமையான, உடனடி ஒத்துழைப்பை அளிக்க வேண்டும்.
   ii. கடந்த ஜூன் மாதம் நடந்த 12 நாள் போரின் போது தாக்கப்பட்ட அணுசக்தி மையங்களில் உயர் செறிவு யுரேனியத்தின் இருப்பு குறித்த விவரத்தை ஐஏஇஏ-வால் தொடர்ந்து பெற முடியவில்லை. இந்தப் பிரச்னை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும்.
   iii. அணு ஆயுதத் தரத்துக்கு நெருக்கமான அளவில் செறிவூட்டப்பட்டுள்ள யுரேனியத்தின் இருப்பு குறித்த முழு அறிக்கையை ஈரான் சமர்ப்பிக்க வேண்டும். ஈரானின் அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதங்கள் தயாரிப்பதற்கானவை என்பதை ஐஇஏ உறுதி செய்ய அத்தகைய அறிக்கை மிகவும் அவசியம் என்று அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.
3. ஆஸ்திரேலிய கால்பந்து வீரர் ரயான் வில்லியம்ஸ் அண்மையில் தனது குடியுரிமையை துறந்து, இந்திய குடியுரிமை பெற்ற நிலையில், அந்த மாற்றத்தை ஃபிஃபா அங்கீகரித்துள்ளது. இனி அவர் இந்திய தேசிய அணிக்கு தேர்வாகலாம்.
4. ஜப்பானில் நடைபெறும் டெஃப்லிம்பிக்ஸ் போட்டியின் துப்பாக்கி சுடுதலில், இந்தியாவின் மஹித் சந்து தனது 3-ஆவது பதக்கத்தை வென்றார். 50 மீட்டர் ரைஃபிள் புரோன் மகளிர் பிரிவில் அவர் 246.1 புள்ளிகளுடன் 2-ஆம் இடம் பிடித்து வெள்ளி பெற்றார்.
5. 56-ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா (ஐஎஃப்எஃப்ஐ) கோவா தலைநகர் பனாஜியில் விமர்சையாக தொடங்கியது.
   i. தொடக்கவிழாவில் கோவா முதல்வர் பிரமோத் சாவந்த், மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் எல். முருகன், ஆளுநர் அசோக் கஜபதி ராஜு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.
   ii. கோவாவில் ஒவ்வோர் ஆண்டும் இந்திய சர்வதேச திரைப்பட விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியாவில் நடைபெறும் மிக முக்கியமான திரைப்பட விழாக்களில் ஒன்றான இது, உலகளாவிய திரைப்படங்களையும், உள்ளூர் திறமைகளையும் வெளிப்படுத்தும் நிகழ்வாக பார்க்கப்படுகிறது.
   iii. இந்திய தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகமும் கோவா மாநில அரசும் இணைந்து வரும் 28-ஆம் தேதி வரை நடத்தும் இப்படவிழா வில், 81 நாடுகளைச் சேர்ந்த 240 படங்கள் திரையிடப்பட உள்ளன.
6. ரிசர்வ் வங்கி ஆளுநர்- சஞ்சய் மல்ஹோத்ரா
7. இலக்குகளைப் பின்தொடர்ந்து சென்று தாக்கி அழிக்கும் திறன்கொண்ட நவீன 'எக்ஸ்காலிபர்' ஏவுகணை உபகரணம் மற்றும் பீரங்கி எதிர்ப்பு 'ஜாவ்லின்' ஏவுகணை உபகரணங்களை இந்தியாவுக்கு விற்க அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.
   i. ரூ.825 கோடி (மதிப்பில் 93 மில்லியன் டாலர்) வாங்கப்படும் இந்த ஏவுகணை தொழில்நுட்பங்கள் இந்தியாவின் பாதுகாப்பு பலம் மற்றும் பிராந்திய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்தும் என்றும் அமெரிக்கா குறிப்பிட்டது.
   ii. உக்ரைன் மீது போர் நடத்தி வரும் ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவது, இருதரப்பு வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை இழுபறி உள்ளிட்ட காரணங்களுக்காக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது மிக அதிபட்சமாக 50 சதவீத வரியை அமெரிக்க அதிபர் டிரம்ப் கடந்த ஆகஸ்ட் மாதம் விதித்தபிறகு, அந்த நாட்டிடமிருந்து இந்தியா மேற்கொள்ளும் முதல் மிகப் பெரிய பாதுகாப்பு உபகரண கொள்முதல் இதுவாகும்.
8. நாட்டில் நீண்ட காலம் பதவி வகித்த 10 முதல்வர்கள் பட்டியலில் 8-ஆவது இடத்தில் பிகார் முதல்வரும் ஐக்கிய ஜனதாதளம் தலைவருமான நிதீஷ் குமார் உள்ளார்.

| நீண்ட காலம் பதவி வகித்த 10 முதல்வர்கள் | | | |
|---|---|---|---|
| வ.எண் | முதல்வர்கள் | மாநிலம் | பதவிக் காலம் |
| 1. | பவன் குமார் சாம்லிங் | சிக்கிம் | 25 ஆண்டுகளுக்கு மேல் |
| 2. | நவீன் பட்நாயக் | ஒடிஸா | 24 ஆண்டுகளுக்கு மேல் |
| 3. | ஜோதி பாசு | மேற்கு வங்கம் | 23 ஆண்டுகளுக்கு மேல் |
| 4. | கேகாங் அபாங் | அருணாசல பிரதேசம் | | 22 ஆண்டுகளுக்கு மேல் |
| 5. | லால் தன்ஹாவ்லா | மிஸோரம் | 22 ஆண்டுகளுக்கு மேல் |
| 6. | வீரபத்ர சிங் | ஹிமாசல பிரதேசம் | 21 ஆண்டுகளுக்கு மேல் |
| 7. | மாணிக் சர்கார் | திரிபுரா | 19 ஆண்டுகளுக்கு மேல் |
| 8. | நிதீஷ் குமார் | பிகார் | சுமார் 19 ஆண்டுகள் |
| 9. | மு.கருணாநிதி | தமிழகம் | 18 ஆண்டுகளுக்கு மேல் |
| 10. | பிரகாஷ் சிங் பாதல் | பஞ்சாப் | 18 ஆண்டுகளுக்கு மேல் |

9. இந்தியா - இஸ்ரேல் தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை தொடக்க தேதி விரைவில் இறுதி செய்யப்படும் என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.
    i. மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இஸ்ரேலுக்கு வந்த மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், டெல் அவிவ் நகரில் இந்திய-இஸ்ரேல் வர்த்தகர்கள் மாநாட்டில் பங்கேற்றார். இஸ்ரேல் தரப்பில் அந்நாட்டின் பொருளாதார-தொழிலகத் துறை அமைச்சர் நீர் பார்காத் தலைமையிலான குழு பங்கேற்றது.
    ii. பின்னர், இருதரப்பு தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த் தையை முறைப்படி தொடங்குவதற்கான வரையறைகளை நிர்ணயித்து கையொப்பமிட்டனர். பேச்சுவார்த்தை தொடக்க தேதி விரைவில் இறுதி செய்யப்படும் என்று பியூஷ் கோயல் தெரிவித்தார்.
    iii. இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்தும் பேச்சுவார்த் தைகளில் ஈடுபட பியூஷ் கோயல் தலைமையில் 60 பேர் கொண்ட குழு இப்பயணத்தை மேற்கொண்டுள்ளது. இந்திய வர்த்தகத் துறை அமைச்சர் ஒருவர் இஸ்ரேலில் அரசுமுறை பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.
10. 'இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தை பாதுகாப்பது நமது கூட்டுப் பொறுப்பாகும்' என தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல் தெரிவித்தார். தில்லியில் நடைபெற்ற கொழும்பு பாதுகாப்பு மாநாடு (சிஎஸ்சி) அமைப்பின் 7-ஆவது தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
    i. சிஎஸ்சியில், இந்தியா, இலங்கை, மோரீஷஸ், மாலத்தீவு மற்றும் வங்கதேசம் ஆகிய 5 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. ஆலோசனைக் கூட்டத்தில் உறுப்பு நாடுகளுடன் விருந்தினராக மலேசியாவும் பார்வையாளராக ஷெஷல்ஸ் நாடும் பங்கேற்றன.
    ii. கூட்டத்தின் முடிவில் சிஎஸ்சியில் முழுநேர உறுப்பினராக இணையும் ஷெஷல்ஸ் முடிவை உறுப்பு நாடுகள் வரவேற்றன.
    iii. இந்தியப் பெருங்கடல் பிராந் தியத்தில் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட சிஎஸ்சி-யின் உருவாக்க ஆவணங்கள் கையொப்பமிடும் நிகழ்வு 2024, ஆகஸ்டில் இலங்கையில் நடைபெற்றது.
11. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பதவியில் இருந்து பூஷண் ராமகிருஷ்ண கவாய் வெள்ளிக்கிழமை (நவ.21) ஓய்வு பெறுகிறார். இதையடுத்து உச்சநீதிமன்றத்தின் அலுவல் நாளான வெள்ளிக்கிழமை அவர் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக கடைசி நாள் வழக்கு விசாரணையை மேற்கொள்வார்.
    i. இந்தியாவின் 52-ஆவது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக நீதிபதி பி.ஆர்.கவாய் கடந்த மே 14-ஆம் தேதி பதவியேற்றுக் கொண்டார்.
    ii. முக்கிய தீர்ப்புகள் - பணமதிப்பிழப்பு நடவடிக்கையின் செல்லுபடியாகும் தன்மை குறித்து தீர்ப்பு, பட்டியலினம்-பழங்குடியினருக்கான இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீட்டை அனுமதித்த தீர்ப்பு, ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கி வந்த அரசமைப்பின் 370-ஆவது பிரிவு ரத்து செய்யப்பட்டது செல்லும் என்ற தீர்ப்பு அளித்த அரசியல் சாசன அமர்வில் இவர் அங்கம் வகித்தார்.
    iii. கடைசியாக மசோதாக்கள் மீது முடிவெடுக்க குடியரசுத் தலைவருக்கும் ஆளுநருக்கும் காலக்கெடு விதிக்க முடியாது என்று அளித்த தீர்ப்பை அளித்த அரசியல் சாசன அமர்வுக்கு பி.ஆர். கவாய் தலைமை தாங்கினார்.
    iv. நீதிபதி பி.ஆர்.கவாய் ஓய்வு பெறுவதைத் தொடர்ந்து, 53-ஆவது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக நீதிபதி சூர்யகாந்த் நவம்பர் 24- ஆம் தேதி பதவியேற்க உள்ளார்.
12. தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 2024- ஆம் ஆண்டுக்கான 'இலக்கிய மாமணி' விருதுகளை பேராசிரியர் தெ.ஞானசுந்தரம், முனைவர் இரா.காமராசு,க.சோமசுந்தரம் (எ) கலாப்ரியா ஆகியோருக்கு வழங்கினார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.
13. கொள்முதல் செய்வதற்கான நெல்லின் ஈரப்பத அளவை உயர்த்த வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்துள்ளது.
    i. நெல் கொள்முதல் செய்வதற்கான அதிகபட்ச ஈரப்பத அளவை 17 சதவீதம் என மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. நிகழாண்டில் தமிழகத்தில் பலத்த மழை பெய்த காரணத்தால், ஈரப்பத அளவை 22 சதவீதமாக உயர்த்த வேண்டும் என மத்திய அரசுக்கு தமிழக அரசு கோரிக்கை வைத்திருந்தது.
14. மாநில சட்டப்பேரவைகள் நிறைவேற்றும் மசோதாக்கள் மீது முடிவெடுக்க மாநில ஆளுநர்கள் மற்றும் குடியரசுத் தலைவருக்கு நீதித் துறை காலக்கெடு நிர்ணயிப்பது பொருத்தமற்றது என்று உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு விளக்கமளித்தது. அதேசமயம், மசோதாக்கள் மீது 'நிரந்தரமாக முடிவெடுக்காமல் அப்படியே வைத்திருக்கும் 'கட்டுப்பாடற்ற அதிகாரங்கள் ஆளுநருக்கு இல்லை என்று அரசியல் சாசன அமர்வு தெளிவுபடுத்தியது.
    i. பேரவை நிறைவேற்றி அனுப்பும் மசோதாவுக்கு ஒப்புதல் வழங் காமல் தாமதப்படுத்தி ஆளுநர்கள் கிடப்பில் போட முடியாது என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. அதில் மேலும் கூறியிருப்பதாவது - ஒரு மசோதா காரணமின்றி நீண்ட காலத்துக்கு எந்த முடிவும் எடுக்கப்படாமல்

கிடப்பில் வைக்கப்பட்டிருந்தால், அந்தச் செயல் பாட்டை நீதிமன்ற ஆய்வுக்கு உட்படுத்தி தேவைப்பட்டால் ஆளுநர் களுக்கு குறிப்பிட்ட அந்தவொரு விஷயத்தில் வரையறுக்கப்பட்ட அளவில் உத்தரவு பிறப்பிக்க முடியும். ஆனாலும், அனைத்து வழக்கு களிலும் நீதிமன்றம் அப்படி உத்தரவுகளைப் பிறப்பிக்காது. அது அந்தந்த சூழ்நிலைகளைப் பொருத்தது எனக் குறிப்பிட்டுள்ளது